செ. கு. எண்:190

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 20.7.2013

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், விஜயநாராயணம் பகுதி அருகே 16.7.2013 அன்று மணல் ஏற்றி வந்த லாரியை நாங்குனேரி வட்டாட்சியர் பிடிக்க முயன்ற போது, அந்த லாரி எதிரே வந்த இரு சக்கர வாகனம் மீது மோதியதில், அந்த வாகனத்தில் பயணம் செய்த மறுகால்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. மகாராஜன் என்பவரின் மகன் சிறுவன் சுடலை பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தான் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த சிறுவன் சுடலை குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் மறுகால்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. சோமு என்பவரின் மகன் வானுமாமலை மற்றும் திரு. மகாராஜன் என்பவரின் மகன் சிறுவன் சின்னத்துரை ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் அகால மரணமடைந்த சிறுவன் சுடலை குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. வானுமாமலைக்கு 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்த சிறுவன் சின்னத்துரைக்கு 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9